**இணைப்பு - I**

**பிரதேச செயலகம் - காரைநகர்**

**2025**

**மனிதவள அபிவிருத்தித் திட்டம்**

**1.அமைப்பு :**

1.1 நிறுவனத்தின் பெயர் - பிரதேச செயலகம் காரைநகர்.

1.2 நிறுவனத்தின் நோக்கு/பணி/குறிக்கோள்/செயற்பாடுகள் - அரச கொள்கைகளுக்கிணங்க பொதுத் துறைகளை ஒருங்கிணைப்பதன் மூலமும் வளங்களின் உச்சப்பயன்பாட்டை உறுதி செய்வதன் மூலமும் மகத்தான பொதுச்சேவை வழங்கலை நிச்சயப்படுத்தல்

1.3 நிறுவனத்தைக் கொண்டு நடாத்துவதன் முக்கியத்துவம் - சேவை பெறுநருடன் நட்பு ரீதியான தொடர்பாடலுடன் கூடிய செயற்பாடுகளை வழங்குதல் மற்றும் அதனூடான பின்னூட்டல் ஆய்வு.

**2. நிறுவனத்தின் மனிதவள அபிவிருத்தித் திட்டத்துக்கான...**

2.1 **நோக்கு –**மனிதவள அபிவிருத்தியானது பல்திறன் கொண்ட பதவியினரை அபிவிருத்தி செய்வதுடன் தொடர்புபடுவதோடு அனைத்து துறைகளிலுமுள்ள அடையாளம் காணப்பட்ட இடைவெளிகளை நிரப்பும் நோக்குடன் பயிற்சி வழங்கல்களை ஏற்படுத்திக் கொடுத்தலாகும்.

2.2 **பணி -** கிடைக்கப் பெற்ற வளங்களைக் கொண்டு பொதுமக்களுக்கு தேவையான அனைத்து சேவைகளையும் திறன்பட வழங்குதல்.

2.3 **குறிக்கோள் -**

- வினைத்திறன் மிக்க நிர்வாகத்தின் ஊடாகப் பிரதேச செயலகத்தின் இயலுமையை மேம்படுத்தல்.
- மக்களுக்கு நெருக்கமான பொதுச்சேவையை தொடர்ச்சியாகப் பேணுதல்.
- உற்பத்தித் திறன் மேம்பாட்டில் சிறந்தமையமாக இருத்தல்.

**2.3பெறுமானங்கள்** -

- விரைவாகவும்,சிறப்பாகவும்,வினைத்திறனுடன் கூடிய மக்கள் சேவையை கண்ணியத்துடன் வழங்கக்கூடிய பதவியணி.
- சேவை நாடிவரும் பொதுமக்களுக்கு உரிய முறையில் வழிகாட்டல்கள் வழங்கப்படுவதோடு அவர்களுக்குரிய தேவைகளை சரியான முறையில் இனங்கண்டு உரியகாலத்தில் பூர்த்திசெய்து வழங்கக்கூடிய பதவியணி.
- அரச வளங்களை சரியாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துகின்ற பதவியணி.
- திட்டங்களுக்கான அரச வருமானத்தினை உத்தமப்படுத்துவதுடன் சிக்கனப்படுத்துவதன் ஊடாக பிரதேசத்தின் அபிவிருத்தியானது வினைத்திறனாகச் செயற்படுத்தப்படுகின்றது.
- பயிற்சி பெற்ற நேர்மனப்பாங்குள்ள அர்ப்பணிப்பான உத்தியோகத்தர்கள்.
- பல்வேறுபட்ட துறைகள் தொடர்பான பயிற்சிகள் காலத்துக்குக்காலம் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுவதன் ஊடாக எந்தவொரு சேவையினையும் எப்படியான ஒரு சூழலிலும் நேர்மனப்பாங்கோடு அர்ப்பணிப்புடன் சேவையாற்றக்கூடிய பதவியணி கட்டியெழுப்பப்படுகின்றது.
- திறந்த மற்றும் தொடர்ச்சியான தொடர்பாடலுடன் (Open and continuous communication வழங்கப்படும் உன்னதமான சேவை.
- கள உத்தியோகத்தர்கள் ஊடாக நேரடியாகச் சென்று பிரச்சினைகள் ஆராயப்பட்டு சேவைகள் வழங்கப்படுகின்றன.

- சேவை பெறுநர்கள் சேவை தொடர்பான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு வரவேற்பறையிலுள்ள உத்தியோகத்தர்கள் ஊடாக விளக்கமளிக்கப்படுகின்றது.
- உத்தியோகத்தர்களின் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வை உத்தியோகத்தர்கள் ஊடாக மேற்பார்வை செய்து அதனூடாக சேவையானது நிறைவேற்றிக் கொள்ளப்படுகின்றது.
- சேவை பெறுநர்கள் சமூகப் பிரச்சினைகளை உடனுக்குடன் தெரிவிப்பதற்காக உரிய தொலைபேசி இலக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
- மக்களின் பங்கேற்புடனான விரைந்த நிலைபேறான சேவை.
- பொதுமக்கள் தமது கோரிக்கைகளையும் விருப்பங்களையும் சுதந்திரமாக தெரிவிப்பதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு அதனடிப்படையில் பிரச்சினைகள் ஆராயப்பட்டு உரிய பொருத்தமான திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

**குறிப்பு - குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்காணும் போது அவ்வந்த குறிக்கோள்களின் கீழுள்ள இலக்குகளை வெவ்வேறாக இனங்காண்பது மிகவும் பொருத்தமானதாகும்.**